Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

LW 391/

1

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள்
807, அண்ணா சாலை, சென்னை-600 002.
முன்னிலை: திரு. ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப.
www.tn.gov.in/dtcp
email id: dtcp@vsnl.net

00194
16 FEB 2016

ந.க.எண்.7515/2014/பிஏ2 நாள்: 11.02.2016

16/2/2016

பொருள்: நகர் ஊரமைப்புத்துறை - சென்னை 2 - கட்டிடம் - சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் - சேலம் மாவட்டம் / வட்டம், சேலம் மாநகராட்சி, வார்டு -E, Block - 60, நகரளவை எண்.112 (S.No.192/3pt,4pt) அழகாபுரம் புதூர் கிராமம் - 2429.19 சதுர மீட்டர் பரப்பளவு மனையிடத்தில் Stilt+4 தளங்களில் அமையும் 40 குடியிருப்புகள் கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்க இசைவளித்தல் - சம்பந்தமாக.

Technical Clearance issued is valid after payment of I & A charges and permission of LPA/NTDA/Local authority.

பார்வை:

1) மனுதாரர் ,வனமாலா கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் விண்ணப்பம், நாள்:25.12.2015.
2) ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண்.இ10/39127 / 2013, நாள்:26.12.2013.
3) உறுப்பினர் செயலர்(பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் ந.க.எண்.391/2014 சேஉதிகு, நாள்:04.04.2014 மற்றும் 26.10.2015.
4) அரசாணை (நிலை) எண்.86, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:28.3.2012.
5) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/09/பிஏ2, நாள்:16.4.2009.
6) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/2009 பிஏ1 நாள்.04.4.2012

உத்திரவு:

சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் / வட்டம் / மாநகராட்சி (S.No.193/3pt,4pt) வார்டு-E, பிளாக் - 60 நகரளவை எண்.112-ல் அமையும் 2429.19 சதுரமீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்திற்கு "(A) to (F)" என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில்

Stilt Floor	1085.69 m^2	வாகன நிறுத்துமிடம்
முதல் தளம்	1085.69 m^2	10 குடியிருப்புகள்
இரண்டாம் தளம்	1085.69 m^2	10 குடியிருப்புகள்
மூன்றாம் தளம்	1085.69 m^2	10 குடியிருப்புகள்
நான்காம் தளம்	1085.69 m^2	10 குடியிருப்புகள்
TOTAL	4342.76 m^2	40 குடியிருப்புகள்

Scanned by CamScanner

மேற்கண்ட உத்தேச 40 குடியிருப்புகள் உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்பு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி / திட்ட அனு வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.65/2016 எ எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations
2. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

நிபந்தனைகள்:

1) உத்தேச 40 குடியிருப்புகள் உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

Scanned by CamScanner

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

13) உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 5 மற்றும் 6-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் 4-ல் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல், நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் உறுப்பினர் செயலர் (பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

உறுப்பினர் செயலர் (பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களை மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு உறுப்பினர் செயலர் (பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு:
மூன்று தொகுப்பு வரைபடங்கள்
3X2 =6

(ஒம்)/-ஆர்.கிர்லோஷ் குமார்
நகர் ஊரமைப்பு இயக்குநர்

பெறுநர்:
உறுப்பினர் செயலர் (பொ)
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம்,
சேலம்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

Scanned by CamScanner

சேலம் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு. க. இளங்கோ, பி.இ.,
திட்ட அனுமதி
நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு-49-ன் கீழ்

ந.க.எண். 391/2014/சேஉதிகு — நாள்: 18 .02.2016
தி.அ. எண். 04 (அ, ஆ)/ 2016
உள்ளாட்சியின் பெயர்: சேலம் மாநகராட்சி

பொருள் : திட்ட அனுமதி – சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் – சேலம் மாநகராட்சி அழகாபுரம்புதூர் கிராமம் – (பழைய ச.எண். 192/3 பாகம், 4 பாகம்) – வார்டு–E, பிளாக்–60, ந.அ.எண். 112–ல் 2429.19 சமீ பரப்பளவு மனையிட ஒப்புதலுடன் உத்தேச ஸ்டில்ட் + 4 தளங்களில் அமையும் (4x10) 40 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு திட்ட அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 7515/2014பிர 2 நாள். 11.02.2016
2. மனுதாரர் திரு. எஸ். கே. செந்தில் குமார் மற்றும் தி/ள். வனமாலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பி) லிட், அவர்களின் விண்ணப்பம் நாள். 19.03.2014 மற்றும் 18.02.2016
3. சேலம் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண். 395 நாள். 16.10.2002

****

<u>உத்திரவு</u>

பார்வை 1–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் நடவடிக்கைகளின்படி சேலம் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி, சேலம் மாநகராட்சி, அழகாபுரம்புதூர் கிராமம், (பழைய ச.எண். 192/3 பாகம், 4 பாகம்). வார்டு–E, பிளாக்–60, ந.அ.எண். 112–ல் 2429.19 சமீ பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனையிடத்திற்கு <u>'A to F'</u> என எல்லையிட்டு மனை ஒப்புதலுடன் உத்தேச ஸ்டில்ட் தளம் (வாகன நிறுத்துமிடம்) + 4 தளங்களில் (4x10) மொத்தம் 40 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு <u>க.வ/ந.ஊ.இ.எண்.65/2016</u> என்ற எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டுள்ளதினைத் தொடர்ந்து அம்மனையில் அமையும்,

<u>உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிட பரப்பு விபரம்</u> :

<u>மனையின் பரப்பு</u> : 2429.19 சமீ

		FSI	Non FSI	USE
ஸ்டில் தளம்	..	--	1085.69 சமீ	(வாகனம் நிறுத்துமிடம்)
முதல் தளம்	..	1085.69 ச.மீ.	57.80 சமீ	(10 குடியிருப்புகள்)
இரண்டாம் தளம்	..	1085.69 ச.மீ.	57.80 சமீ	(10 குடியிருப்புகள்)
மூன்றாம் தளம்	..	1085.69 ச.மீ	57.80 சமீ	(10 குடியிருப்புகள்)
நான்காம் தளம்	..	1085.69 ச.மீ.	57.80 சமீ	(10 குடியிருப்புகள்)
டெரஸ் தளம்	..	--	24.00 சமீ	(மாடிப்படி கூண்டு)

Scanned by CamScanner

பரப்பளவு கொண்ட கட்டுமானத்திற்கு க.வ.தி.அ/சே.உ.திகு எண்.04(அ, ஆ)/2016 என்ற எண்ணில் 18.02.2016 முதல் 3 (மூன்று) வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49 (2)-ன்படி திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்-

1 It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

2 Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the Architect/Licensed Surveyor and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3 " நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த அவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணபதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

4 கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் ஆகிய விபரங்கள் கொண்ட பலகை நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

பொது நிபந்தனைகள்

1 திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)-ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

2 பிரிவு 79, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

Scanned by CamScanner

13 உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்

14 திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

15 வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

16 கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

17 கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

18 வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (சேலம் மாநகராட்சி உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மனுதாரரால் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது. திட்ட அனுமதி வரைபடங்களுடன் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும்.

[signature] 18/2/2016

உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
சேலம் உள்ளூர் திட்டக்குழுமம், சேலம்

18.2.16

இணைப்பு

1. முத்திரையிட்ட 2 தொகுப்பு வரைபடங்கள் (2x2 =4)
2. பார்வை 1–ல் காணும் கடித நகல்.

பெறுநர்
ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

<u>நகல்</u>
திரு. எஸ்.கே. செந்தில்குமார்,
மேலாண்மை இயக்குநர்,
மெசர்ஸ் வனமாலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பி) லிட்,
119- U, கிரீன்வேஸ் ரோடு,
பேர்லேண்ட்ஸ், சேலம் –16.

Scanned by CamScanner

சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சி [redacted] ஆணையாளர் அவர்களின்
நடவடிக்கைகள்

நேமுவ :- திரு K. R. செல்வராஜ், M.Sc.,

கட்டிட அனுமதி உத்திரவு

(சேலம் மாநகராட்சி சட்டம் 1994
பிரிவு 272, 273, 279-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டது)

நாள் : 22.2.16

க. அ. எண். : J7/50/16

க.வி. எண் : J7/44/16

பொருள் :- கட்டிட அனுமதி சேலம் மாநகராட்சி மண்டலம் 1 / (2) / 3 / 4. டவுன் சர்வே எண். ______ எண் ந . அ . 112, S.F. No. 192/3Pt, 4Pt ல் புதியதாக கட்டிடம் கட்ட / வீதியில் கதவு எண். / மனை எண். ______ கூடுதலாக கட்டிடம் கட்ட / முடிந்த கட்டிடத்திற்கு கட்டிடத்தை புதுப்பித்துக் கட்ட / கூடுதலாக கட்டிடம் கட்ட / முடிந்த கட்டிடத்திற்கு மனை சேலம் மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 272 (1) 273, 279-ன்படி மனை மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல் – உத்திரவு பிறப்பித்தல்.

பார்வை :- 1) திரு / திருமதி M/S வனமாலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் Pvt. Ltd., 1) S.K. செந்தில்குமார், 2. N. சுந்தர், 3. N. ராஜேஷ்குமார், 4. N. சேஷாத்திரி அவர்களின் 22.2.16 ம் தேதி விண்ணப்பம் (மூலம்)

2) இரசீது எண்கள் 1525108006, 1525108008, 1525108007 செலுத்தப்பட்ட ரூ. 1,11,000/- 600/- 2,60,000/- (மூலம்) தேதி 22.2.16.

3) இவ்வலுவலக திட்ட அனுமதி J7/50/16

உத்திரவு :-

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டல அலுவலகம் நகரமைப்பு எண். 112 ல் வீதி கதவு எண் / மனை எண் S.F. No. 192/3Pt, 4Pt அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் படி குடியிருப்பு / குடியிருப்பு அல்லாத புதியதாக கட்டிடம் கட்ட / கட்டிடத்தை புதுப்பித்துக் கட்ட / கூடுதலாக கட்டிடம் கட்ட / முடிந்த கட்டிடத்திற்கு கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளின் படி 22.2.16 ந் தேதி முதல் 21.2.18 முடிய இரண்டு வருட காலத்திற்கு திரு / திருமதி M/S. வனமாலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் P. Ltd., 1) S.K. செந்தில்குமார் 2) N. சுந்தர் 3) N. ராஜேஷ்குமார் 4) N. சேஷாத்திரி என்பவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

1) கட்டிடம் கட்டப்படும் இடத்தில் முன்புறமாக கட்டிட உரிமையாளர் பெயர், கட்டிட அனுமதி எண். அனுமதி பெற்ற தேதி, அனுமதி காலம், அனுமதி நீடிப்பு காலம், கட்டிடம், கட்டப்படும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்தால் வைக்கப்பட்ட 2:1 அளவு கொண்ட கரும்பலகையை நன்கு தெரியும் வண்ணம் மாட்டி வைக்கப்பட வேண்டும்.

2) அங்கீகரிக்கப்பட்ட திருத்திய வரைபடம் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வுக்கு காண்பிக்கும் வண்ணம் கட்டிட இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

3) கட்டிடத்தை அங்கீகரிக்க வரைபடங்களின்படி பூர்த்தி செய்ய 15 தினங்களுக்குள் அல்லது முடிவெரிய 15 தினங்களுக்குள் சேலம் மாநகராட்சி 1994ம் வருடத்திய சட்டம் 129ன் படி மாநகராட்சி ஆணையருக்கு சொத்து வரி விதிக்க கோரி உரிய படிவத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(திருப்புக)

Scanned by CamScanner

4) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிட பாகங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு சேலம் மாநகராட்சி சட்டம் பிரிவு 283-ன் படி அரையாண்டு ஒன்றுக்கு 9 சதுர மீட்டருக்கு ரூ. 50/- அபராதம் வசூலிக்கப்படும்.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறுதான் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதலாகவும் விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட மாட்டாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதல் அவசியம் எனில் அதற்காக திருத்திய வரைபடங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதை செய்யத் தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டம் 447-ன் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அல்லது தொகையையும் உம்மிடம் வசூல் செய்யப்படும்.

7) வழங்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டபடி கட்டிட வேலை ஆறு மாத காலத்திற்குள் துவங்கப்பட வேண்டும் அவ்வாறு துவங்கப்படாவிட்டால் மீண்டும் கட்டிட அனுமதியை உரிய தொகையை செலுத்தி புதுப்பித்துக் கொண்ட பின்னரே கட்டிட வேலை துவங்கப்பட வேண்டும்.

8) ஏற்கனவே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன், மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும்.

9) பொது சுகாதார சட்டம் பிரிவு 26,33-ன் படி மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து உத்திரவு பெறப்படாமல், புதியதாக கட்டப்பட்ட வீட்டில் குடிபுகக் கூடாது.

10) கட்டிட சம்பந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை சாலைகளில் போடக் கூடாது.

11) மனை இடத்தில் மீதமுள்ள காலியிடத்தில் நிழல் தரும் மரங்கள் நடப்பட வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புபடி மழைநீர் சேகரிப்பு மனையில் செய்து முடிக்க வேண்டும்.

13) தவறான அல்லது மோசடியான ஆவணங்கள், தகவல்கள் (Misrepresentation or fruad) சமர்ப்பித்து கட்டிட உரிமம் பெற்றுள்ளது தெரியவந்தால் சேலம் மாநகராட்சி சட்டம் பிரிவு 451 (4)-ன் படி உரிமம் ரத்து செய்யப்பட்டு மேல் நடவடிக்கை தொடரப்படும்.

14) கட்டடத்தின் கூரையிலிருந்தும் மனையின் திறந்த வெளியிலிருந்தும் வரும் மழைநீரை சேமிக்கும் வகையில் தங்கள் மனைக்குள் மழைநீர் உறிஞ்சி குழிகள் அரசு பிரசுரங்களில் அறிவுறுத்தியுள்ள அளவுகளின் படி அமைக்க வேண்டும்.

15) புதிய கட்டிட விதிகளின்படி மருத்துவமனைகள், சமுதாய கூடங்கள், திருமண மண்டபங்கள் அனைத்து தங்கள் மனைகள் மற்றும் 150 ச.மீ பரப்புக்கு கூடுதலான குடியிருப்புக்குக் கட்டிடங்களுக்கு சூரிய ஒளி சுடுநீர் அமைப்பு நிறுவவேண்டும்.

இணைப்பு :- ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் – 1.

உம்மை நகல்

பெறுநர் :-
திரு/திருமதி M/S. வனமாலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிட்.,
1) S.K. செந்தில்குமார் 2) ல.பிரீத்
3) ல.ரமேஷ்குமார் 4) ல.சேஷாத்திரி,
119, கிச்சிப்பேல் ரோடு, சேலம்.

ஆணையருக்காக
சேலம் மாநகராட்சி
22/2/16.

நகல்
இ.நி.பொ. / உ.பொ. கட்டிடம் கட்டுவதை கண்காணித்து
மேல் நடவடிக்கை எடுக்க.

உதவி ஆணையாளர் (வருவாய்)

Scanned by CamScanner



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate